Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

அமர்வு வழக்கு எண்.124/2020

Depositions of : PW1
solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : Manikandan @ Mani | வயது | : |
| தந்தை பெயர் | : | கிராமம் | : |
| தாலுக்கா | : | மாவட்டம் | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of April - 2025.

(எதிரிகள் ஆஜர்.)

<u>முதல் விசாரணை:-</u>

என்னுடைய பெயர் மணிகண்டன் என்ற மணி. என்னுடைய தந்தை பெயர் உறரிதாஸ் .நான் தற்பொழுது எண்.85, அண்ணா தெரு, திருவள்ளுவர் நகர், அம்பத்தூரில் குடியிருந்து வருகின்றேன். நான் ஆட்டோ ஓட்டி வருகின்றேன். கடந்த 06.07.2019 அன்று நான் ஆட்டோ ஓட்டிக்கொண்டிருந்தேன். என்னுடைய அப்பாவும் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகின்றார். வண்டி ஓட்டி கொண்டிருந்த பொழுது அம்பத்தூர் ரயில்வேஸ்டேஷசன் மார்க்கெட் அருகில் உள்ள டாஸ்மாக் கடையில் வைத்து என்னுடைய அப்பாவை சிலர் வெட்டிக்கொண்டிருப்பதாக நான் ஓடிப்போய் பார்த்தேன். நான் சென்றுகொண்டிருக்கும் பொழுது 8 பேர் கத்தியோடு எதிரே வந்தார்கள். அந்த எட்டு பேரையும் என்னால் அடையாளம் காட்டமுடியும். இந்நீதிமன்றத்தில் இன்று ஆஜராகியிருக்கின்ற எதிரிகளில் இடமிருந்து முதலில் நிற்பவர் மணிகண்டன் இரண்டாவதாக நிற்பவர் காரிகாலன், மூன்றாவதாக நிற்பவர் தாஸ், நான்காவதாக

நிற்பவர் பெயர் நெப்போலியன், ஐந்தாவதாக நிற்பவர் பெயர் ரஞ்சித், ஆறாவதாக நிற்பவர் கோழிகுஞ்சு விஜய். ஏழாவதாக நிற்பவர் மற்றொரு ரஞ்சித், கடைசியாக நிற்பவர் டார்வின். சாட்சி எதிரிகளை தனது கையை நீட்டி அடையாளம் காட்டினார். சாட்சி தற்பொழுது ஐந்தாவதாக நிற்பவர் பெயர் செந்தில் என்று கூறுகின்றார். நான் சென்று பார்த்த பொழுது என்னுடைய அப்பா இறந்துவிட்டார். நான் அம்பத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் இது தான். அது அ.த.சா.ஆ.1. இந்த வழக்கு சம்மந்தமான போலிசர் என்னை விசாரித்துக்கொண்டார்கள்.

1 முதல் 8 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை=

நான் சொன்ன டாஸ்மாக் கடை அம்பத்தூர் மார்க்கெட் ரோட்டில் இருக்கின்றது என்றால் சரிதான். இந்த டாஸ்மாக் கடை ரயில்வேடேஷன் பக்கத்திலேயே இருக்கின்றது. அதனால் எப்பொழுதுமே அந்த கடையில் கூட்டம் அதிகமாக இருக்கும். டாஸ்மாக் கடைக்கு பக்கத்திலும், எதிர்புறமும் நிறையகடைகளும் இருக்கின்றன, சாலை ஓர கடைகளும் அங்கு இருக்கின்றது. என்னுடைய தந்தை பெயரில் ஒரு கொலை வழக்கு இருந்து அதில் இருந்து அவர்விடுதலையானவர் என்றால் சரிதான்.. என் மீதும் கொலை முயற்சி வழக்கு இ.த.ச.307ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு நான் ஜெயிலுக்கு சென்று வந்திருக்கின்றேன், அந்த வழக்கு நிலுவையில் இருக்கின்றது என்றால் சரிதான். சொல்லுகின்ற சம்பவத்திற்கு முன்பாக இந்த டாஸ்மாக் கடையில் உள்ள பாரை என்னுடைய பெரியப்பா ஜெயகுமார் நடத்தி வந்தார் என்றால் சரிதான். இந்த சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்பட்டும் தேதியில் அந்த பாரை வேறு ஒருவர் நடத்தி வந்தார் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் ஆட்டோ ஓட்டும் தொழில் தவிர அந்த மார்க்கெட்டில் யார் யார் எங்கெங்கு கடை போடனும் என்னும் வேலையை பஞ்சாயத்தாக செய்வார் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் பகுதிகளில் என்னுடைய தகப்பனார் குடும்ப பிரச்சனைகளில் தலையிட்டு பஞ்சாயத்து செய்யவார் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் மீது விடுதலையான கொலை வழக்கு தவிர வேறு வழக்குகளும் இருக்கின்றது. அந்த வழக்குகளில்

விசாரணை நிலுவையில் இருந்து வந்தது. அந்த பாரிலேயே என்னுடைய தகப்பனாரை பல முறை வில்லிவாக்கத்தில் இருந்து வந்த பல நபர்கள் தாக்க முயற்சி செய்தார்கள் என்றால் சரிதான். அ.த.ஆ.1 புகாரில் உள்ள வாசகங்கள் என்னுடைய கையெழுத்து அல்ல. கையொப்பம் மட்டும் என்னுடையது. புகாரில் உள்ள வாசகங்களை யார் எழுதினார் என்று எனக்கு நேரடியாக தெரியாது. நான் ஆட்டோ ஓட்டிக்கொண்டிருந்த பொழுது தகவல் சொன்னது யார் என்று பெயரை என்னால் சொல்ல முடியாது. ஆட்டோ ஸ்டான்டில் பக்கத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள். சொல்லப்பட்ட டாஸ்மாக் கடையில் இருந்து காவல் நிலையத்திற்கு 10 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனாரை தொட்டு தூக்கி பார்க்கவில்லை. சம்பவம் நடைபெற்ற இடம் பொதுமக்கள் அடர்த்தியாக நடமாடும் இடம் என்றாலும் அந்த இடத்தில் எதிரிகளை குறிப்பிட்டு பார்த்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. போலிசார் சொல்லக்கொடுத்ததின் பெயரில் தற்பொழுது எதிரிகளை நீதிமன்றத்தில் வைத்து அடையாளம் காட்டுகின்றேன் என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனாரின் உடல் அரசு மருத்துவமனைக்கு 9.00 மணிக்கு கொண்டு செல்லப்பட்டது. போலிஸ் வந்து தான் பாடியை எடுத்து சென்றார்கள். நானும் மருத்துவமனைக்கு சென்றேன். நான் கொடுத்ததாக சொல்லப்படும் புகார் நான் சொன்ன நேரம், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அரசு மருத்துவமனையில் இருந்து 12.00 மணிக்கு வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் உண்மை சம்பவத்தை மறைத்து போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை :- இல்லை.